**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S. No.20/2025**

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 13 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**<u>நாள் : 13.03.2026</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. விவேக் (PW–1) | வயது | : | /2025 |
| த/க பெயர் | : | திரு. செந்தமிழ் | தொழில் | : | சுயதொழில் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**<u>1, 3, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் கீழ பத்மசாலவர் தெருவில் உள்ளது. பழைய TS No.345/5 இல் உள்ளது என்றால் சரிதான். அதன் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 6090 சதுரடியாகும். பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். தாவா சொத்தானது ஆரம்பத்தில் 1951 இல் ரங்கநாத செட்டியாருக்கு சொந்தமானது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தங்கள் எதிர்வழக்குரையில் 1902 இல் இருந்து தாவா சொத்து தொடர்பான பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் தங்கள் வசம் இருப்பதாக சொல்லியுள்ளார்கள் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.
2) ஆரம்பத்தில் 6090 சதுரடியில் எத்தனை வீடுகள் இருந்தது என்றால் பழைய ஓட்டு வீடு 3 வீடுகள் இருந்தது. அந்த 3 வீட்டிற்கு ஒரே கதவிலக்கம் உள்ளதா என்றால் வெவ்வேறு கதவிலக்கம் கொண்டது. என்னென்ன கதவிலக்கம் என்றால் 21, 21A, 21 B. தற்போது அந்த 3 ஓட்டு வீடுகளும் உள்ளதா என்றால் கதவிலக்கம் 21 கொண்ட ஒரு வீடு மட்டும் உள்ளது. 6090 சதுரடி சொத்தில் நான் எவ்வளவு சொத்து உரிமை கோருகிறேன் என்றால் 3045 ½ சதுரடி. தாவா சொத்தை அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் நீளம், அகலம் தெரியுமா என்றால் தெரியாது.
3) தாவா சொத்து அமைந்துள்ள விடு எந்த தெருவில் உள்ளது என்றால் கீழ பத்மசாலவர் தெரு, வடக்கு பார்த்த வீடு. அந்த 3 வீட்டிற்கும் ஒரே நுழைவு வாயிலா அல்லது வேறு உள்ளதா என்றால் ஒரே நுழைவு வாயில். 2ம் கட்டம், 3ம் கட்டம் வீட்டிற்குதான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால்

சரிதான். 2, 3 கட்டடத்திற்கான வீட்டிற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளதல் முதல் கட்ட வீட்டில் எனக்கு என்ன பாத்தியம் உள்ளது என்றால் திண்ணை, நடநடப்பு உள்ளது. 1, 2, 3 கட்ட ஓட்டு வீடு உள்ளதா என்றால் 1,2ம் கட்ட ஓட்டு வீடு இடிக்கப்பட்டது, திண்ணை மட்டும் உள்ளது. மேற்கண்ட அமைப்பு இருக்கும் புகைப்படத்தை என்னால் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும்.

4) தாவா சொத்து 3045 ½ சதுரடி எனக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் ருக்மணியம்மாள் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி கொடுத்ததன் மூலம் கிடைத்தது. ருக்மணியம்மாளுக்கு எவ்வாறு கிடைத்தது என்றால் அவரது கணவர் ராஜகோபால் செட்டியார் கொடுத்தார்.

**பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் வேண்டுமென கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.20 10:23:45 +0530

District Munsif
Mannargudi.